**30.01.2024**
***OS 186/2022***
**வா.சா.1 சாயிரா பானு**
**குறுக்கு விசாரணை:-**

என்னுடைய பெயர் சாயிரா பீவி என்ற சாயிரா பானு. வழக்கு சொத்துக்களை அங்கையர்கன்னி என்பவரிடமிருந்து எனது தகப்பனார் வாங்கி அதை எனது பெயரிலும், எனது அம்மா பெயரிலும் பதிந்தார். பத்திரத்தில் சாயிரா பீவி என்று மட்டும்தான் குறிப்பிடப்பட்டுள்ளது. அங்கையர்கன்னி என்பவரிடமிருந்து பெற்ற அசல் கிரைய பத்திரம் என்னுடைய வீட்டில் உள்ளது. அதை ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் அதை என் மகள் வைத்திருந்தார். அவர் வெளிநாடு சென்றுவிட்டு தற்போதுதான் வந்தார். அது அவரிடம்தான் உள்ளது. நான் வெளிநாட்டில் 2000-2021 வரை இருந்தேன். அவ்வப்போது இந்தியா வந்து சென்றேன். நான் கையெழுத்தை சாயிரா தாஜிதீன் என்று கையெழுத்து போடுவேன். நான் 2000ல் கடவு சீட்டு எடுத்ததலிருந்து சாயிரா தாஜிதீன் என்று கையெழுத்து போடுகிறேன். அதற்கு முன்பாக சாயிரா பானு என்றுதான் கையெழுத்து போட்டேன். சமீபத்தில் நான் சாயிரா பானு என்று கையெழுத்து போடவில்லை என்றால் நோட்டரி அபிடவிட்டில் கையெழுத்து சம்மந்தமாக அவ்வாறு கையெழுத்து செய்துள்ளேன். அந்த அபிடவிட்டை நிலத்தில் பெயர் மாற்றுவதற்காக எழுதிக்கொடுத்தேன். நிலத்தின் பெயர் மாற்றுவதற்காக சாயிரா பீவி, சாயிரா பானு, சாயிரா தாஜிதீன் என்று அபிடவிட் கொடுப்பது வழக்கம் என்றால் இல்லை. நான் மாற்றி கையெழுத்து போட்ட அபிடவிட் இந்த வழக்கிற்காக ஒரு ஆவணம் உற்பத்தி செய்வதற்காக தயாரிக்கப்பட்டது என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் நகல் ஆவணத்தில் சாயிரா பானு என்று மாற்றி உள்ள கையெழுத்து அபிடவிட் என்னுடையதுதான் என்றால் ஆமாம். வழக்குரை நான் சொன்னதில் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு படித்து பார்த்ததின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது. என்னுடைய பிறந்த வருடம் 1973. இந்த சொத்துக்கள் வாங்குதற்கு முன்பாகவே நான் பிறந்துவிட்டேன் என்றால் சரிதான். என்னுடைய வழக்குரையில் வெளிநாடு செல்வதற்கு முன்பு வரை என்னுடைய அனுபவத்தில் இருந்து வந்ததாக சொல்லியுள்ளேன். 1973 முதல் 2000வரை இந்த இடத்திற்கான வரி ரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வரி ரசீதை எத்தனையாவது ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்று தெரியவில்லை. இந்த இடத்திற்கு எப்போது மின்இணைப்பு பெறப்பட்டது என்றால் நான் கிரையம் வாங்கும்போதே மின்இணைப்பு இருந்தது. என்னுடைய அப்பா 2015லும், அம்மா 1996லும் காலமாகிவிட்டார்கள். வழக்கு சொத்தின் முகவரி

அழகர்கோவில் அஞ்சல், மாங்குளம் முதல் தெரு, க.எண்.2/1 ஆகும். சாட்சி முகவரியை சொல்லிவிட்டு எனக்கு சரியாக தெரியவில்லை என்று சொல்கிறார். என்னுடைய அப்பா பெயர் கே.சிக்கந்தர். ஒய்யம்மாள் என்பவருக்கு தங்குவதற்கு அனுமதி கொடுத்துள்ளதாக சொல்லியுள்ளேன். அதற்கு எழுத்துமூலமான ஆவணம் ஏதும் இல்லை, வாய்மொழிதான். வழக்கு சொத்தின் மொத்த விஸ்தீரணம் 10 செண்டாகும். 10செண்ட் இடத்தை எந்த ஆவணமும் எழுதி வாங்காமல் தங்க விட்டேன் என்றால் அவர் எந்த நேரத்திலும் உதவிக்கு வருவார். எனவே நம்பிக்கையின் அடிப்படையில் அவருக்கு கொடுத்தேன். நான் நம்பிக்கையின் அடிப்படையில் அவருக்கு கொடுக்கவில்லை என்றும், ஹரிஹரமுருகன் என்பவருக்கு சொத்தை விற்பதாக ஒப்புக்கொண்டு ரூ.1லட்சம் பெற்றுக்கொண்டு எனது அப்பா கொடுத்தார் என்றால் இல்லை. அந்த பணத்தை வாங்கி எனது கணவர் வெளிநாடு செல்வதற்காக செலவு செய்தேன் என்றால் இல்லை. அவர் 1988லேயே வெளிநாடு சென்றுவிட்டார். எனது கணவர் 1ம் பிரதிவாதியின் கணவர் நெருங்கிய நண்பர் என்றால் இல்லை. ஒரே ஊர்காரர்கள். தற்போது நான் தங்கியுள்ள முகவரி தண்டகாரன்பட்டி, பொட்டுரணிகரை, பழங்காநத்தம் ஆகும். அது எனது தாயார் வீடு. ஒய்யம்மாள் என்பவருக்கு இடத்தை விற்பதாக ஒப்புக்கொண்டு முன்பணம் பெற்றுள்ளேன் என்றும், நான் வெளிநாடு சென்றுவிட்டு வந்து கிரையம் செய்து தருவதாக ஒப்புக்கொண்டு, 1ம் பிரதிவாதியையும், அவரது குடும்பத்தாரையும் வழக்கு சொத்தில் இருந்துகொள்ள சொன்னேன் என்றால் சரியல்ல. ஒய்யம்மாளிடம் எப்போது சொத்தை கொடுத்தேன் என்றால் 2004ல் கொடுத்தேன். ஒய்யம்மாள் 2021ல் இறந்தார். போன் மூலமாக தகவல் கிடைத்தது. 2021 டிசம்பரில் இந்தியா வந்தேன். இந்த வழக்கின் பிரதிவாதியை இடத்தை விட்டு வெளியேற்ற காவல்துறை மூலம் அழுத்தம் கொடுத்தேன் என்றால் புகார் மட்டும்தான் கொடுத்தேன் அவர்கள் விசாரணைக்கு வரவில்லை. வழக்குரை பாரா-10ல் 2021லிருந்து பிரதிவாதிகள் வழக்கு சொத்தை ஆக்கிரமித்துள்ளதாக சொல்லியுள்ளேன். வழக்கு சொத்திற்கு தண்ணீர் இணைப்பு உள்ளது. தண்ணீர் இணைப்பு எந்த காலத்தில் வந்தது என்றால் வருடம் ஞாபகமில்லை. நான் கிரையம் வாங்கிய பின்னிட்டுதான் வந்தது. 2011லேயே 1ம் பிரதிவாதியின் பெயரில் என்னுடைய வீட்டிற்கு தண்ணீர் இணைப்பு உள்ளது என்றும், அதுதான் என்னிடம் காட்டப்படும் ஆவணம்தான் என்றால் சரிதான். ஆனால் அது யார் கேட்டாலும் அவ்வாறு ரசீது தருகிறார்கள்.மேற்படி ரசீது பி.வா.சா.ஆ.1 2வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சி பின்னிட்டு ஒய்யம்மாளிடம் பணம் கொடுத்து எங்கள்

பெயருக்கு வாங்குமாறு சொன்னேன். மேற்படி தொகை யார் மூலமாக கொடுக்கப்பட்டது என்றால் இரண்டாவது மகன் கதிரேசன் மூலமாக கொடுக்கப்பட்டது. எவ்வாறு கொடுக்கப்பட்டது என்றால் யார் மூலமாக கொடுக்கப்பட்டது. நான் 6வது வரை பழங்காநத்தம் அரசு உதவி பெறும் ஆர்.சி பள்ளியில் படித்தேன். மாங்குளத்திலிருந்து எவ்வாறு பழங்காநத்தம் சென்று வந்தேன் என்றால் பழங்காநத்தத்திலிருந்துதான் படித்தேன். வயல் இருந்ததால் மேற்படி சொத்து வாங்கப்பட்டது. வழக்குரையில் வழக்கு சொத்தில் வசித்து வந்ததாக சொல்லியுள்ளது தவறு என்று சொன்னால் அவ்வப்போது வருவோம், போவோம். என்னுடைய இடத்தை ஒய்யம்மாளுக்கு விற்பதாக சொல்லி பணம் வாங்கிதான் அவர்களை அந்த சொத்தில் தங்க வைத்தோம் என்றும், தற்போது சொத்தில் வில்லங்கம் உள்ளதால் பணத்தை திருப்பி கேட்டதால் தற்போது அதை மறுத்து நான் பொய்யாக சொல்லி வருகிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் யாரிடமும் விற்பதற்கு கொடுக்கவில்லை. வா.சா.ஆ.6 வாரிசு சான்று எப்போது வாங்கப்பட்டது என்றால் தற்போதுதான் வாங்கப்பட்டது. பழைய சான்று தொலைந்துவிட்டதால் புதிய கணினி சான்று வாங்கப்பட்டது. வாரிசு சான்று வழக்கு தாக்கல் செய்வதற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இடத்தை விற்பதற்காக தோரயமாக ரூ.9லட்சம் கொடுத்ததில் அதில் கடைசி தொகையை நான் நேரடியாக பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி தொகையை நான் வாங்கிய பின்னிட்டுதான், பிரதிவாதிகளுக்கு சந்தேகம் ஏற்பட்டு வழக்கு சொத்தின் பேரில் சட்டகருத்துரை மேற்கொள்ளபட்டதில் நான் கிரையம் வாங்கியதே சட்டப்படி செல்லாது என்று தெரிய வந்ததால்தான் மேற்படி எதிர்வாதஉரையில் குறிப்பிட்டுள்ள தொகையை பிரதிவாதிகள் திருப்பி கேட்டனர் என்றால் நான் யாரிடமும் தொகை வாங்கவில்லை. வழக்கு சொத்து நான் வாங்கிய காலத்திலிருந்தே என்னுடைய அனுபவத்திலேயே இல்லை என்றும், ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதாக சொல்லும் காலம் வரை நானோ, எனது குடும்பத்தாரோ வழக்கு சொத்தில் சுவாதீன அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. 2021லிருந்து வழக்கு சொத்து ஆக்கிரமிக்கப்படதாக சொல்லுவது காலவரையறையை சரிகட்டுவதற்காக நான் சொல்லியுள்ள சங்கதி என்றால் சரியல்ல. 1997லிருந்தே வழக்கு சொத்து 1ம்பிரதிவாதியின் கணவரிடம் முன்பணம் பெற்று கொடுத்துவிட்டேன் என்றும், அதன் பின்னிட்டு இவ்வளவு காலமாக 1ம்பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும், என்னுடைய சம்மதத்தின் அடிப்படையில்தான் இவ்வளவு காலம் இருந்தார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் அனுபவத்தில் இருப்பதை காட்டக்

கூடிய ஆவணங்களை தாக்கல் செய்தால் அனுபவத்தை ஒத்துக்கொள்வீர்களா என்றால் ஒத்துக்கொள்ள மாட்டேன். நான் ஒய்யம்மாளிடம்தான் கொடுத்தேன். வாங்கிய முன்பணத்தையும் திரும்ப கொடுக்க கூடாது என்றும், கிரையம் செய்து கொடுக்க கூடாது என்ற எண்ணத்தில்தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு அனுமதி சுவாதீனம் கொடுத்துவிட்டு, முன்பணம் வாங்கி கொண்டு, வாய்மொழியாக கிரைய ஒப்பந்தம் போட்டு, நம்பி பணம் கொடுத்த பிரதிவாதிகளை நம்பிக்கை மோசடி செய்து, ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் தொடுக்கப்பட்ட வழக்குதான் இந்த வழக்கு என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் ரூ.1,06,327/- எதனப்படிடையில் கோரியுள்ளேன் என்றால் அவ்வாறு நான் யாரிடமும் கோரவில்லை. அவ்வாறு எனக்கு எவ்வித தொகையும் தேவையில்லை. இந்த வழக்கு முற்றிலும் பொய்யான தகவல்களின் அடிப்படையில் ஜோடிக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்பதால் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

ஒப்பம்-S.கணேசன்
சார்பு நீதிபதி
மேலூர்